**Vol. 6, Issue : 01** **June - 2022**

புதிய அவையம்

ISSN : 2456-821X

===================================================================

## காவல்கோட்டம் புதினம் வழி சமூக நிலைப்பாட்டில் இனவரைவியல்

***மு.ரோஸ்,***
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை*
*தூய நெஞ்சக்கல்லூரி (தன்னாட்சி),*
*திருப்பத்தூர் மாவட்டம் - 635601.*

===================================================================

***முன்னுரை:-***

*புதினங்களின் வழியாக ஒரு குறிப்பிட்ட பண்பாட்டை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விளக்குவது. குறிப்பிட்ட பண்பாட்டைச் சார்ந்த படைப்பாளி தனது பண்பாட்டின் வாழ்வியலை அல்லது மரபுகளைப் புதினமாக அல்லது இலக்கியமாக வடித்துத் தருவதே இனவரைவு இலக்கியமாகும். அத்தகைய இனவரைவு அடிப்படையில் வாழ்வியலை உணர்த்தியுள்ள சு.வெங்கடேசனின் காவல் கோட்டம் புதினம் ஆகும். பண்பாட்டைச் சரியாகப் புரிந்து கொண்டு அதனை எழுத வேண்டுமானால் அப்பண்பாட்டில் வாழ வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. இனவரைவியலை வரிவடிவத்தில் ஒரு பண்பாடாக உரைக்கின்றதை இக்கட்டுரை ஆராய்கிறது.*

*பண்பாட்டை அதன் முழுப் பரிமாணத்தில் புரிந்து கொள்ளும் வகையில் விளக்குவது எளிதானதன்று. எனவே, பொதுவாகப் புதின ஆசிரியர்கள் இனவரைவியலாளர்கள் எனும் வடிவில் பண்பாட்டை நேரில் கண்டு உணர்ந்து அவ்வாறே வெளிப்படுத்துவர். இப்புதின ஆசிரியரும் ஆய்வின் வழி குறிப்பிட்ட குழுவினர், நேரடியாகச் சந்தித்து அவர்களோடு பழகி*

*வாழ்ந்து அவர்களது அன்றாட வாழ்வியலைக் கண்டு உணர்ந்து, உற்றுநோக்கி இயற்றியுள்ளதை இக்கட்டுரை படைப்பாளனின் புதினத்தோடு மெய்ப்பிக்கிறது.*

***காவல் கோட்டத்தில் இனவரைவியல் பதிவுகள்:-***

*சாகித்ய அகதெமி விருது பெற்ற காவல்கோட்டம் புதினம் சு.வெங்கடேசன் அவர்களால் படைக்கப்பட்டது. இப்புதினம் இனவரைவியல் கூறுகளைப் பெரிதும் கொண்டுள்ளது. இப்படைப்பில் கள்ளர் இனத்தவரின் இனவரைவியல் தகவல்களைச் செம்மையாகப் பதிவு செய்துள்ளார். இம்மக்கள் மற்ற இனத்தவரில் இருந்து முற்றிலும் மாறுபட்ட பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களாக இருப்பதுடன் அவர்களது இனம் குறித்த சிறப்புகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***இனவரைவியல் விளக்கம்:-***

*“இனவரைவியல் என்பது ஒரு குறிப்படட்ட பண்பாட்டை நேரடியாக உற்றுநோக்கி விவரித்தெழும் விவரிப்பு முறையைக் குறிப்பது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்”1 என்கிறார் தனஞ்செயன். அருகிவரும் மக்களின் பண்பாடுகள் பழக்கவழக்கங்கள் பற்றி எழுதுவதே இனவரைவியல் என விளக்கலாம்.*

*ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவின் இனவரைவியல் கூறுகளை அம்மக்களின் வாழ்வியல் அனுபவங்களுடன் இணைத்து ஒரு புதினமாகப் படைக்கப்படும் பொழுது அப்புதினம் இனவரைவியல் புதினமாகிறது. அம்மக்களின் பண்பாடுகளை மீட்டுரவாக்கம் செய்யவும் அம்மக்களின் பண்பாடுகளை உலகம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதைக் காரணமாகக் கொண்டும் இனவரைவியல் புதினங்கள் படைக்கப்படுகின்றன.*

***கள்ளர் இன வரலாறு:-***

*இம்மக்கள் “கி.பி.2 முதல் 5ஆம் நூற்றாண்டு வரை களப்பிரர் ஆட்சியில் போர் வீரர்களாகப் பணிபுரிந்து இருக்கலாம்”2 என சு.வெங்கடேசன் கூறுகிறார். இம்மக்கள் நாயக்க மன்னர்களால் படைவீரர்களாக நியமிக்கப்பட்டனர். பின்னர் காவல்காரர்களாக பணிபுரிந்தது மட்டுமின்றி களவுத் தொழிலிலும் ஈடுபட்டனர்.*

***வழிபாட்டு மரபு:-***

*“ஒரு குறிப்பிட்ட விலங்கு, தாவரம், இயற்கைப் பொருள், ஆதி முன்னோர், முனிவர், தெய்வம் ஆகிய எந்த ஒன்றின் ஆற்றல் மீது கொண்டுள்ள அனைத்து வகையான நம்பிக்கைகளும் சடங்குகளும் வழிபாடும் சேர்ந்ததே வழிபாட்டு மரபாகும்”3 என்கிறார் ஆசிரியர்.*

*தாதனுவீர் கள்ளர் இன மக்கள் சடச்சியின் வழித் தோன்றலாகக் கூறுவின்றனர். அவளையே தங்கள் தெய்வமாகக் கருதி சடச்சியை வழிபட்ட பின்பே கருப்பனை வழிபடுகின்றனர்.*

இவர்களின் வழிபாட்டு முறைகளும், சடங்குகளும் மற்ற மக்களிடம் இருந்து வேறுபடுகின்றன. இம்மக்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் ஆதி மூதாதையின் காலம்தொட்டு இருந்து வரும் வழிபாட்டு முறைகளுடன் கலந்த கதைகளை அறிந்து வைத்திருக்கின்றனர்.

"புதிய வாரிசு பிறந்ததாலோ அல்லது அதற்கு மொட்டை எடுத்தாலோ கருப்பனைக் கும்பிட்டு சடச்சியின் நிழலிலே அமர்ந்து கதை சொல்வார்கள்"4

"இந்த கதை அறுந்து போனால் ஊர் அறுந்து போகும் ஊரும் கதையும் வேறல்ல மண்ணும் கதையும் பிரிக்க முடியாத உருவாகக் கொண்ட கருவில் பிறந்தவர்கள் தான் தாதனுவீரக்காரர்கள்"5 வழிபாட்டு மரபுகளை பின்பற்றி வாழ்பவர்களாக இம்மக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

முதலில் குழந்தை பிறந்தவுடன் கொம்பூர் வகையறாவுக்கு தலக்கட்டு வரியினைக் கொடுப்பார்கள். முதல் நாள் கன்னம் போடப் போகிறவன் பனைமரத்தான் வகையறாவுக்கு காணிக்கை வரிகொடுப்பார்கள். குழந்தை பிறந்தவுடன் குழந்தையையும் தாயையும் சடச்சியின் மரத்திற்கு அழைத்து வருவார்கள். மரத்தின் மேலுள்ள கொம்பை கழற்றி, மொச்சைமாரின் மீது வைப்பாhர்கள். அதன் அருகில் குழந்தையை வைப்பார்கள். கொம்பூர் வகையறாவுக்கு என்று தலக்கட்டு வரியுடன் வாழை இலையுடன் வெற்றிலை, தேங்காய் தானியங்கள் தருவர்.

**திருமணம்:-**

"திருமணம் என்பது ஒரு குழுவிலுள்ள மணதுணையை வேறொரு குழுவினர் பெறுவதைக் குறிக்கிறது"6 என்று லெவிஸ்ட்ராஸ் குறிப்பிடுவதாக பக்தவத்சல பாரதி கூறுகிறார். தாதனுவீர உள்ளவர்களின் திருமணத்தில் மாப்பிள்ளைச் சாப்பாட்டில் தான் முதன்முதலில் எடை போடுவர்கள். திருமணத்திற்கு முதல் நாள் பெண் வீட்டில் மாப்பிள்ளையுடன் பத்து அல்லது பன்னிரெண்டு இளவட்டங்களை பந்தியில் உட்காரவைப்பார்கள்.

"மணமகன் முதலில் சாப்பிட்டுவிட்டு அடுத்தடுத்து வாங்கி அதிகமாகவும் வேகமாகவும் சாப்பிட வேண்டும். அப்பொழுதான் பெண் வீட்டார் "இவெ நம்ம பிள்ளையை வச்சு காப்பாத்திடுவாண்டா"7 என்பார்கள்.

மணமக்களுக்காகக் காட்டுப் பூக்களால் மாலை செய்வார்கள். அம்மாலையையே திருமணத்தில் மாற்றிக் கொள்வர்கள். ஊரின் பெரியவரான பெரியாம் பிள்ளை என்பவர் சரடு எடுத்துக் கொடுக்க திருமணம் நடைபெறும். திருமணத்திற்குப் பின் மாப்பிள்ளை கல்தூக்கி எறிதல் மாப்பிள்ளையை முன்னே ஓட விட்டு துரத்துதல் போன்ற போட்டிகள் நடைபெறும். இவையெல்லாம் மணகனின் ஊரில் மணமகளுக்குக் கிணற்றில் எவ்வாறு தண்ணீர் இறைக்கிறாள் என்பதை வைத்து அவள் மணமகனுடன் நடத்த போகும் வாழ்க்கையை மணமகன் ஊரார் கணித்து விடுவர்.

பெண்ணிற்குச் சீர்வரிசை கொடுக்கும் பழக்கம் இம்மக்களிடம் இருந்திருக்கிறது. திருமணமாகி பெண், மணமகனின் வீட்டிற்கு வந்த பின் ஊரில் முதலில் தண்ணீர் கிணற்றைக் காட்டுவார்கள். பின் ஊர் பெரியவர் சடச்சியைக் கும்பிடச் சொல்வார். அப்பெண் மண் சட்டியை எடுத்து சுனையில் இருந்து நீரை எடுத்து ஆலமரத்து இளம் விழுதுக்கு ஊற்றி விட்டு மண்ணைத் தொட்டு வணங்கிக் கொள்வாள். பின்பு மணமக்கள் கருப்பனைக் கும்பிடச் செல்வர். இவ்வாறு இம்மக்கள் திருமணம் நடத்துகின்றனர்.

**மணமுறிவு:-**

தங்களுக்குப் பிடித்தமானவர்களை தங்கள் இனத்திற்குள் திருமணம் செய்கின்றனர். ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ சேர்ந்து வாழ விருப்பம் இல்லையென்றால், ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்தைக் கூட்டுவார்கள். பஞ்சயத்தார் விவரம் அறிந்து முடிந்தவரை இருவரும் ஒன்றாக வாழ அறிவுரை கூறுவார்கள். அவர்களது அறிவுரையைக் கேட்காத நிலையில் கீழே கிடக்கும் வேப்பங்குச்சியை எடுத்து இரண்டாக முறித்து ஆளுக்கொன்றாகக் கொடுத்து விடுவார்கள். இவ்வாறு செய்துவிட்டால் மணமுறிவு ஆகிவிட்டது என்றும் தங்களுக்கு விருப்பமானவர்களைத் திருமணம் செய்து கொண்டு வாழலாம் என்றும் அர்த்தமாகும்.

**குழந்தை பிறப்பு:-**

தாதனுவீர் மக்கள் ஆண் குழந்தை பிறந்தால் ஒத்த படையில் குலவையும் பெண் பிள்ளை பிறந்தால் இரட்டைப் படையில் குலவையும் இடுவார்கள். குழந்தையை மொச்சைமாரின் மீது படுக்க வைப்பார்கள்.

பழக்கவழக்கங்கள்:-

கள்ளர் இன பெண்களிடையே காது வளர்த்துக்கொள்ளும் வழக்கம் காணப்படுகின்றது. இம்மக்கள் அழகு கருதி காதினை வளர்த்துக் கொண்டாலும் வெளியூர் செல்லும் பயணியர் பாதுகாப்பு வேண்டி கள்ளர்களிடம் வந்தால் இம்மக்கள் பயணியருடன் காது வளர்த்த கள்ளர் இனச் சிறுமியை அனுப்புவர். அவள் தனது காதில் ஒரு விரலை இட்டபடி செல்வாள். அவ்வாறு இவள் அவர்களுடன் செல்லும் போது யாரும் இவர்களைத் தாக்கமாட்டார்கள். இதனையும் மீறி யாராவது குற்றம் இழைத்தால் சிறுமியின் ஊரினரால் குற்றம் செய்தவர் தண்டிக்கப்படுவர் என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று எட்கர் தாஸ்டன் கூறுகிறார்.

ஆண் பிள்ளைகளுக்கு கவரடைப்பு செய்யும் வழக்கம் காணப்படுகின்றது. மழை பெய்தாலும், மகிழ்வாக இருக்கும் பொழுதும் ஜல்லிக்கட்டிற்குச் சென்று அணைக்க முடியாத

காளையை அணைத்து விட்டு வந்தாலும், ராஜகளவு நடந்தாலும் நல்ல நாள் பார்த்து கும்பிடும் வழக்கம் உடையவர்கள் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

**திருவிழா:-**

இம்மக்கள் நல்ல நாளில் கும்பிட்டால் தாதனுவீரைச் சுற்றியுள்ள கிராமங்களில் செய்தி பரவிவிடும் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மக்கள் ஏதாவது ஒரு பொருளைக் கொடுத்து அனுப்புவார்கள். இம்மக்கள் அனைத்துப் பொருட்களையும் களவாடிக் கொண்டுவந்து சேர்ப்பார்கள். ஆனால் மதுரைக் கோனாரிடம் இருந்துவரும் கிடாய்க்கு மட்டும் காசு கொடுத்து சடங்குகள் செய்து வாங்கிவருவார்கள். முதல் நாள் சடச்சிக்கும் இரண்டாம் நாள் கருப்பனுக்கும் மூன்றாம் நாள் பட்டாசாமிக்கும் விழா எடுக்கின்றனர். இக்காலங்களில் ஆணும், பெண்ணும் மிகுந்த மகிழ்வுடன் இருப்பார்கள். இவ்விழாவில் தங்கள் முன்னோர்களின் செயல்களை நினைவுபடுத்துவதான சடங்குகளை நடத்துகின்றனர்.

**ஊர் தலைவர்:-**

கள்ளர் இனத்தவர்களிடையே வயது மூத்த தலைவர் இருப்பார் இவரது சொல்லுக்குக் கட்டுப்பட்டே ஊரில் உள்ள மக்கள் செயல்படுவார்கள். இவர் தங்களின் மூதாதையர் வரலாற்றை சிறு குழந்தைகளுக்குச் சொல்லுவார். இவர், சிறுவர்களுக்கு ஐந்து விதமாக பயிற்சிகளைக் கற்பிப்பார். ஓடுதல், தாண்டுதல், எறிதல், துவங்குதல், சாப்பிடல் ஆகிய ஐந்தையும் இவர்தான் கற்றுத் தருவார்.

*"ஊரின் முதிர்ந்த நெந்து அவன்தான்"8*

என்று ஆசிரியர் கூறுகிறார். களவில் தந்திரம், நுணுக்கம் அறிந்தவர்களிடம் மட்டுமெ இவர் காவல் கம்பைக் கொடுப்பார். கள்ளர் இன மக்கள் ஊர் தலைவர் என்கிற பெரியாம் பிள்ளைக்கு முதன்மை நல்குகின்றனர்.

**நுண்ணிய அறிவு:-**

இம்மக்கள் கொத்து கொத்தாகப் பிரிந்திருப்பர். ஒவ்வொரு கொத்திலும் நிலையாள் இருப்பார். இவரே தங்கள் கொத்தினை வழி நடத்திச் செல்வார். திறமை மிகுந்த கொத்து ஊரில் பலரால் பாராட்டப்படும் தனியாகக் களவிற்குச் செல்ல மாட்டார்கள். வேட்டைக்குச் செல்லும் வழியில் கிடந்த முயலின் புளுக்கையின் கடைசியின் முனைக்கொத்து விழுந்த திசையை வைத்து இம்முயல் இடது பக்க புதருக்குள் தான் இருக்கும் என்று கணிக்கும் அறிவுள்ளவர்களாக இருந்துள்ளனர். இருட்டில் மாட்டின் மணியோசையை வைத்தே எத்தனை மாடுகள் என்பதை சொல்லிவிடும் அளவு அறிவு நுணுக்கம் உள்ளவர்களாக இம்மக்கள் இருந்துள்ளனர்.

***மருத்துவமுறை:-***

*குழந்தைப் பிறந்த பிறகு தாய்க்குப் பால் ஊறுவதற்காக பாலாட்டங் குலையையும் காயையும் அரைத்துக் குடிப்பர். பால் ஊறாமல் இருப்பதற்காக பேக்கா காயை கல்லில் உரசி தடவுகின்றனர். வேட்டைக்குச் செல்லும் நாய்க்கு பன்றி முன்பட்டால் பச்சை இலையை பிழிந்து விட்டால் சரியாகிவிடும். காது வளர்க்கும் பெண்ணிற்கு இலுப்பை புங்கை எண்ணெய் தேய்ப்பர். இவ்வாறு இம்மக்கள் இயற்கையான மருத்துவ முறைகளை அறிந்தவர்களாகவும் இருக்கின்றனர்.*

***மதுரை நகரின் அரசியல் வரலாற்றில் காவல் கோட்டம் புதினம்:-***

*சு. வெங்கடேசனின் காவல் கோட்டம் புதினம் மதுரை நகரின் சமூகப் பண்பாட்டு அரசியல் வரலாற்றை நாயக்கர் காலம் தொடங்கி ஆங்கிலேய ஆட்சிக்காலத்தின் இறுதிவரை ஆயிரம் பக்கங்களுக்கு மேல் விவரித்துள்ளது.*

*மதுரை நகரைப் பற்றிய இந்த ஆவண புதினத்தில் வரலாறு புனைவு என்கிற எல்லைகள் தகர்க்கப்பட்டுள்ளன. 54 இயல்களைக் கொண்ட முடியரசு என்னும் முதல் பாகம் மதுரா விஜயம், பாளையப்பட்டு, யூனியன் ஜாக் எனும் மூன்று பெருந்தலைப்புகளில் மதுரை நகரின் அரசியல் வரலாற்றை விஜயநகர ஆட்சி என்ற கால வரிசையில் எடுத்துரைக்கின்றது.*

*66 இயல்களைக் கொண்ட குடிமக்கள் எனும் இரண்டாம் பாகம் இருள் எனும் நாதம் தாது பரூசத்திற்கு முன் மெஜுரா சிட்டி பென்னிங்டன் ரோடு ரயில் களவு, குற்றப் பரம்பரைச் சட்டம் பட்டாசாமி எனும் ஏழு பெருந்தலைப்புகளில் மதுரை நகர் சார்ந்த குடி மக்களின் சமூகப் பண்பாட்டு வரலாற்றை விவரிக்கின்றது.*

*ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மதுரை நகர் கல்வி, தொழில், வாணிபம், தகவல் தொடர்பு, போக்குவரத்து நிர்வாக முறை ஆகியவற்றில் படிப்படியாக அடைந்த மாற்றங்களை இப்பகுதி விவரிக்கிறது.*

*புதினத்தில் மையமாக நாயக்க மன்னர்களும் தாதனூர் கள்ளர்களும் இடம்பெறுகின்றனர். ஏனைய சமூக மக்கள் புதினத்தில் விளிம்பு நிலையிலேயே இடம் பெறுகின்றனர். காவல் கோட்டம் எனும் தலைப்பிற்கேற்ப மதுரை நகரைக் காவல் செய்த கள்ளர் இன மரபினரின் இனவரைவியலும் பிரிட்டிஷாரின் புதிய காவல் முறையால், அவர்கள் காவல் அதிகாரத்தை இழந்ததனால் ஏற்பட்ட முரண்களும் அவர்கள் குற்றப்பரம்பரை ஆக்கப்பட்ட சமூக வரலாறும் புதினத்தில் விரிவான சித்தரிப்பிற்குள்ளாக்கப்பட்டுள்ளன.*

***புதினத்தில் கதை நிகழும் களங்கள்:-***

*நாகமலை கீழ்க்குயில்குடி அருகே இருப்பதாக சித்தரிக்கப்படும் தாதனூர் என்ற கிராமமும் காவல் கோட்டம் செய்யும் கள்ளர்கள் வந்து கூடும் மதுரை வடக்குமாசி வீதி இராமாயண*

சாவடியும் நாவலின் கதை நிகழ்வுகள் நடைபெறும் முக்கியக் களங்களாக நாவலின் மைய வெளியாக அமைந்துள்ளன.

தாதனூர் கிராமம், நாட்டார் கதைப்பாடல்களில் திரும்பத்திரும்ப மறித்து வருகின்ற வினையலகு போன்று புதினத்தில் தொடர்ந்து இடம் பெற்று வாசகனுக்;கு அலுப்பூட்டுகின்றது. மதுரை நகரின் அரசு அதிகாரத்திற்குட்பட்ட மையப் பகுதியும் தாதனூர் கிராமம் நீங்கலாக வேறு புறநகர்ப் பகுதிகள் கிராமங்கள் புதினத்தில் விவரிப்புக்குட்படுத்தப் படவில்லை. அதே போன்று நாயக்கர், கள்ளர் இனத்தாரால்லாத வேறு இனத்தார் பற்றி பதிவுகள் புதினத்தில் மிக அருகியே உள்ளன.

குறிப்பாக நாயக்கர் கால வரலாற்றில் மிகவும் பேசப்பட்ட மதுரை வீரனைப் பற்றி இந்த புதினத்தில் எந்தப் பதிவும் இல்லை. புதினத்தின் புனைவர்க்க முறையிலும் முதல் பாகத்திற்கும் இரண்டாம் பாகத்திற்கும் இடையில் ஒரே சீரான தன்மைகள் இல்லை.

**முடிவுரை:**

காவல்கோட்டம் புதினத்திற்கும் இனவரைவியலுக்குமிடையில் ஓர் உறவு நிலை இருப்பதால் புதினத்தின் வழியாகப் பண்பாட்டை அணுக இயலும். இப்புதினத்தை ஆதாரமாகக் கொண்டு சமூகச் சிந்தனை நோக்கில் மக்களின் வாழ்வியலை மெய்ப்பிக்கிறது. இனவரைவியல் என்பது ஒரு பண்பாட்டை எதார்த்தமாகக் காட்சிப்படுத்துகிறது. அவ்வகையில் காவல்கோட்டமும் இடம்பெறுகிறது.

புதினங்களை இனவரைவியலை வெளிப்படுத்தும் தரவாக மாற்ற முடியும் என்பதை இந்த புதினத்தின் வாயிலாக நாம் அறியலாம். வரிக்குவரி இனவரைவியலாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது பொருள் அல்ல. அப்படி புதினங்கள் இனவரைவியலை எடுத்துக்கொள்வதும் இல்லை. பொதுவாக ஒவ்வொரு புதினங்களையும் வாசிப்பதன் மூலம் கிடைக்கின்ற மையக்கருத்து என்பது அப்புதினங்களில் புதைந்து கிடக்கும் இனவரைவியல் தரவுகளை அடையாளங்கான உதவும் என்பதை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

கள்ளர் இனவரலாறு வழிபாட்டு மரபு, திருமணமுறை, பிறப்பு, இறப்பு போன்ற வாழ்வியல் செய்திகளைச் சமூக நோக்கோடு இனவரைவியல் பதிவுகளாய் இருப்பதை நாம் அறியலாம்.

இனவரைவியல் கூறுகளைப் பெரிதும் கொண்டுள்ள இப்புதினம் கள்ளர் இனத்தாரின் வாழ்வியலை உரைக்கிறது. மதுரை நகரின் அரசியல் வரலாற்றையும், நாயக்க மன்னர்களுக்கும் கள்ளர்களுக்கும் இடையேயான சமூக விளிம்புகளை வெளிப்படுத்தியுள்ளது.

ஒரு இனத்திற்கான வாழ்வியலை வெளிப்படுத்திய இப்புதினம் 2011-ஆம் ஆண்டிற்கான சிறந்த புதினமாகச் சாகித்திய அகாதெமியால் தேர்ந்தெக்கப்பட்டது பெரும் சிறப்பு என்பது இவ்வியல் முடிவாகும்.

கள்ளர்களை ஒடுக்க நாயக்கர்கள் முயன்றதையும் கள்ளர்கள் மதுரையைக் காவல் புரிந்ததையும் கள்ளர்களுக்கு கோவில் மற்றும் பொது இடங்களில் கொடுக்கப்பட்ட மரியாதையையும் இதில் அறியலாம். கள்ளர் இன மக்கள் தங்கள் மூதாதையரை வழிபாட்டு தெய்வமாகக் கொண்டதுடன் மூதாதையர் காலம் தொட்டு இருந்து வரும் வரலாற்றோடு கலந்த கதைகளை அறிந்தவர்களாகக் காணப்படுகின்றமையை இனவரைவியல் நோக்கோடு காவல் கோட்டம் புதினத்தின் வாயிலாக மெயப்பிக்கிறது.

திருமணம் குழந்தை பிறப்பு விழாக்கள் மணமுறிவு போன்ற ஒவ்வொரு செயலின் போதும் ஊர் பெரியவர் என்கிற பெரியாம் பிள்ளையின் சொற்களைக் கேட்டே நடக்கின்றனர் என்பதையும் திருமணத்தின் போது ஆணிற்கும் பெண்ணிற்கும் போட்டிகள் வீரவிளையாட்டாக நடத்தப்படுகின்றன என்பதனையும் நாம் இக்கட்டுரையின் வழி அறியலாம். தாங்கள் விரும்பிய ஆணுடனோ பெண்ணுடனோ விருப்பம் இருந்தால் மட்டுமே திருமணம் செய்து வாழ்கின்றனர். விருப்பம் இல்லாத ஆணோ பெண்ணோ மணமுறிவு பெற்றுக்கொண்டு விரும்பியவர்களுடன் சுதந்திரமாக வாழ அனுமதிக்கின்றனர் என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

இம்மக்கள் நுண்ணிய அறிவு கொண்டவர்களாக இருப்பதுடன் இயற்கை மருத்துவம் அறிந்தவர்களாகவும் காணப்படுகின்றனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக நாம் தெரிந்துகொள்ள முடிகிறது.

**துணைநூற் பட்டியல்:-**


1. தனஞ்செயன். ஆ. 2014, தமிழ் இலக்கிய மானிடவியல், ப. 24.
2. சு. வெங்கடேசன், காவல் கோட்டம், ஏழாம் பதிப்பு: 2017, தமிழினி வெளியீடு, ப. 60.
3. சு. வெங்கடேசன், காவல் கோட்டம், ப. 180.
4. மேற்படி. ப. 260.
5. மேற்படி. ப. 126.
6. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.80.
7. சு. வெங்கடேசன், காவல் கோட்டம், ப. 909.
8. மேற்படி. ப. 64.
9. மா.ராமலிங்கம், நாவல் இலக்கியம், ப. 120.